1990 சனவரி 23]

வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவும் வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு நிச்சயமாக வலியுறுத்தி கேட்டுக் கொள்ளும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் கடற்கரை இரயில் பாதைக்குக் குறுக்கே அமைந்திருக்கக் கூடிய சாலை சந்திப்புகளில், லெவல் கிராஸிங்கில் போக்குவரத்தை அனுமதிக்க வேண்டியுள்ளதால் கூடுதல் ரயில் வண்டி விட முடியவில்லை என்று இரயில்வே நிர்வாகம் சொல்கிறது. இதற்கு இந்தச் சந்திப்புகளிலே சுரங்கப் பாதை அல்லது மேம்பாலம் கட்டுவது மிக மிக அவசியம். தாம்பரத்திற்கும் கிண்டிக்கும் இடையே மேம்பாலங்கள் கட்டப்பட இந்த அரசு ரயில்வே துறையை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நிச்சயம் வலியுறுத்தும்.

மலைப் பகுதிகளிலும் காடுகளிலும் மரங்களை வெட்ட பர்மிட் வழங்கும் குழு.

*336 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைப் பகுதிகளிலும் காடுகளிலும் மரங்களை வெட்ட பர்மிட் வழங்கும் குழுவில் அந்தந்தத் தொகுதி பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளில் உள்ள தனியார் தோட்டங்களிலும் மற்றும் தனியார் காடுகளிலும் மரங்களை வெட்ட அனுமதி அளிக்கும் மாவட்ட குழு, தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம், 1949 மற்றும் தமிழ்நாடு மலைப் பகுதி (மரங்கள் பாதுகாப்புச்) சட்டம் 1955 ஆகியவற்றின் பிரிவு 2 (ஏ)-ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள காரணத்தால், இக் குழுவில் தொகுதி சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சேர்க்க வழிவகை இல்லை.

9—55 மணி.

திரு. ஆர். அண்ணாநம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவரும் வனத்துறை அதிகாரியும் இன்னும் சில அதிகாரிகள் மட்டுமே இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே, மக்களால்

[1990 சனவரி 23

தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அந்தக் குழுவில் இணைத்தால் நலமாக இருக்கும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, சட்டத்தை திருத்தினால்தான் அதைச் செய்ய முடியும். ஆகவே இப்போதைக்கு நான் இதுபற்றி எதுவும் சொல்வதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி : தலைவர் அவர்களே, இது போன்ற மரங்கள் கட்டிங் பெர்மிட் கொடுக்கின்ற குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டேன். அந்தக் குழு மட்டும் பரிசீலனை செய்து கட்டிங் பெர்மிட்டுகள் கொடுக்கின்றபோது சில தவறுகள் நடந்து விடுகின்றன. அந்தக் கட்டிங் பெர்மிட் கொடுக்கின்ற போது காய்ந்து விழக் கூடிய மரங்களை மட்டும் வெட்ட வேண்டும் என்று அந்தக் குழு உத்தரவிடும்போது இடையிலே சிலர் கட்டிங் பெர்மிட் எடுக்கின்றவர்கள் தவறான வழியில் பச்சை மரங்களை வெட்டுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை அந்தக் குழுவில் இணைத்தால் அந்தப் பணி சிறப்பாக நடக்கும் என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இதுபற்றி சட்ட திருத்தம் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இதில் சாதகமும் இருக்கிறது, பாதகமும் இருக்கிறது. ஆகவே இப்போதைக்கு அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

அருவி இல்லம் விடுதியை சுற்றுலாத் துறைக்கு மாற்றுதல்

*2640 திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், குற்றாலம் நகரியத்திற்குச் சொந்தமான அருவி இல்லம் விடுதியை சுற்றுலாத் துறைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.